# பத்திரிக்கை செய்தி (Press News)
## புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்
## சத்துணவு அமைப்பாளர்/சமையலர்/சமையல் உதவியாளர்
## காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

**ந.க.எண்:22864/2020/எக்ஸ்1** **நாள்: 24.09.2020**

கிருஷ்ணகிரி மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களில் கீழ்க்கண்டவாறு ஏற்பட்டுள்ள அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| காலிப்பணியிட விவரம் | | |
|---|---|---|
| அமைப்பாளர் | சமையலர் | சமையல் உதவியாளர் |
| 342 | 64 | 645 |

மேற்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் (பெண்கள் மட்டும்) விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்கள் நகல்களுடன் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் **26.09.2020** முதல் **09.10.2020** மாலை 5.00 மணிக்குள் நேரிலோ அல்லது பதிவஞ்சல் தபால் மூலமாகவோ தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எனவே, **09.10.2020 மாலை 5.00** மணிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு எடுத்துக்கொள்ளப்படும். மாதிரி விண்ணப்ப படிவங்கள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் 5.00 வரை பெற்றுக்கொள்ளலாம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட இணையதள முகவரி www.krishnagiri.nic.in என்ற முகவரியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியரகத்திற்கு விண்ணப்பிக்க கூடாது. சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகம் / நகராட்சி அலுவலகத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளி சத்துணவு மையங்களுக்கு மட்டும் இனசுழற்சி முறை பின்பற்றப்படமாட்டாது.

## I. சத்துணவு அமைப்பாளர் பதவிக்கான தகுதிகள்:-

### 1) கல்வித்தகுதி.

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- ❖ பழங்குடியினர் (ST) எட்டாவது வகுப்பு (தேர்ச்சி/தோல்வி) வரை படித்திருக்க வேண்டும்.

### 2) வயது வரம்பு (Date of Notification) அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளன்றுள்ளபடி:-

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

(த.பி.பா)

3) **<u>பிற தகுதிகள்:-</u>**

- ❖ நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.
- ❖ சத்துணவு மைய கணக்குகளை தனியே பராமரிக்கும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

4) மாற்றுத்திறனாளிகளுக்கு அமைப்பாளர் பணியிடத்திற்கு 4% சதவீதம் ஒதுக்கீடு அனுமதிக்கப்படும்.

5) **<u>ஊதிய விகிதம்</u>**

அமைப்பாளர் பணிக்கு ரூ.7700-24200 ஊதிய விகிதம் மற்றும் பிறபடிகள் வழங்கப்படும்.

## II. சத்துணவு சமையலர் பதவிக்கான தகுதிகள்:-

1) **<u>கல்வித்தகுதி.</u>**

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி.
- ❖ பழங்குடியினர் (ST) எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

2) **<u>வயது வரம்பு (Date of Notification) அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளன்றுள்ளபடி:-</u>**

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

3) **<u>தூர சுற்றளவு :-</u>**

- ❖ நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.

4) **<u>ஊதிய விகிதம்:-</u>**

- ❖ சமையலர் பணிக்கு ரூ.4100-12500 ஊதிய விகிதம் மற்றும் பிறபடிகள் வழங்கப்படும்.

## III. பள்ளி சத்துணவு சமையல் உதவியாளர் பதவிக்கான தகுதிகள்:-

1) **<u>கல்வித்தகுதி.</u>**

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 5-ஆம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி.
- ❖ பழங்குடியினர் (ST) எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

(த.பி.பா)

2) **<u>வயது வரம்பு (Date of Notification) அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளன்றுள்ளபடி:-</u>**

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

- ❖ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

- ❖ விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

3) **<u>தூர சுற்றளவு :-</u>**

- ❖ நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.

4) **<u>ஊதிய விகிதம்:-</u>**

- ❖ சமையல் உதவியாளர் பணிக்கு ரூ.3000-9000 ஊதிய விகிதம் மற்றும் பிறபடிகள் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தங்களது இருப்பிடத்திலிருந்து 3 கி.மீட்டர் தூர சுற்றளவுக்குள் அமைந்துள்ள சத்துணவு மையத்திற்கு இனசுழற்சி முறையில் ஒதுக்கப்பட்ட பணியிடத்திற்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கும்பட்சத்தில் தங்கள் குடியிருப்பிற்கு அருகில் அமைந்துள்ள பள்ளிக்கு விண்ணபத்திருப்பின் அதையே கணக்கில் எடுத்துக்கொண்டு நேர்காணலுக்கு அழைப்பானை அனுப்பப்படும். மற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**<u>இணைக்கப்பட வேண்டிய சான்றுகள் விவரம்:-</u>**

(விண்ணப்பத்துடன் சான்றிதழ் நகல் மட்டும் இணைக்க வேண்டும். நேர்முக தேர்வின்போது அசல் சான்றுகள் காண்பிக்கப்பட வேண்டும்)

1) பள்ளி மாற்றுச்சான்றிதழ் (TC) ஜெராக்ஸ் நகல்.
2) கல்வித்தகுதி சான்று நகல்.
3) மதிப்பெண் சான்றிதழ் நகல்.
4) சாதி சான்று நகல்.
5) ஆதார் அட்டை நகல்.
6) விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களாக இருப்பின் உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் நகல்.
7) மாற்றுத்திறனாளிகளாக இருப்பின் அதற்கான சான்றிதழ் நகல்.

**மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,**
**கிருஷ்ணகிரி.**

**விண்ணப்ப எண் :**

# சத்துணவு அமைப்பாளர் /சமையலர் / சமையல் உதவியாளர் பணிக்கான விண்ணப்பம்

| |
|---|
| பாஸ்போர்ட் சைஸ் போட்டோ |

மாவட்டம் : -

ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி / மாநகராட்சி : -

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3. | இருப்பிட முழு முகவரி (அஞ்சல் எண்ணுடன்) | : | |
| 4. | விண்ணப்பிக்கும் பணி | : | அமைப்பாளர் / சமையலர் / சமையல் உதவியாளர் |
| 5. | பிறந்த தேதி / வயது (அரசால் வழங்கப்பட்ட பிறந்த தேதிக்கான ஆவணச் சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 6. | கல்வித் தகுதி (மாற்று சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 7. | பணியிடம் கோரும் பள்ளியின் பெயர் மற்றும் ஊர் | : | |
| 8. | விண்ணப்பதாரரின் இருப்பிடத்திற்கும் விண்ணப்பிக்கும் பள்ளிக்கும் உள்ள தூரம் | : | |
| 9. | ஒதுக்கீடு விவரம் | : | |
| 10. | சாதி மற்றும் உட்பிரிவு ( வட்டாச்சியரிடம் பெறப்பட்ட சாதி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும் பழங்குடியினராக இருப்பின் கோட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஜாதி சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | : | |

| | | | |
|---|---|---|---|
| **11.** | **இருப்பிடத்திற்கான ஆதாரம் (ஆதார் / வாக்காளர் அடையாள அட்டை / குடும்ப அட்டை ஏதேனும் ஒன்று கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)** | **:** | |
| **12** | **ஊனமுற்றவர் ( ஆம் / இல்லை) சான்று இணைக்கப்பட வேண்டும்** | **:** | **ஆம் / இல்லை** |
| **13** | **மனுதாரர் ஆதரவற்ற விதவை /** கணவரால் **கைவிடப்பட்டவரா?** (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | **:** | **ஆம் / இல்லை** |
| **14.** | **பிறகுறிப்பு.** | **:** | |

மேற்காணும் விபரங்கள் அனைத்தும் உண்மை என சான்றளிக்கிறேன்.

**இடம் :**

**நாள் :** **விண்ணப்பதாரர் கையொப்பம்**

**<u>இணைக்கப்பட வேண்டிய சான்றுகள் விவரம்</u>**

1) பள்ளி மாற்றுச்சான்றிதழ் (TC) ஜெராக்ஸ் நகல்.
2) கல்வித்தகுதி சான்று நகல்.
3) மதிப்பெண் சான்றிதழ் நகல்.
4) சாதி சான்று நகல்.
5) ஆதார் அட்டை நகல்.
6) விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களாக இருப்பின் உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் நகல்.
7) மாற்றுத்திறனாளிகளாக இருப்பின் அதற்கான சான்றிதழ் நகல்.

---

## <u>அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்</u>

விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்டுள்ள மேற்காணும் சுயவிபரங்கள் மற்றும் இணைப்பு ஆவணங்கள் தொடர்பான அசல் சான்றுகள் பார்வையிடப்பட்டது. தனியருக்கு நடத்தப்பட்ட நேர்முக தேர்வு மற்றும் இணைப்பு ஆவணங்களின் அடிப்படையில் இவ்விண்ணப்பத்தாரர் தகுதி பெற்றவர் / தகுதியற்றவர் என பரிந்துரை செய்யப்படுகிறது.

**<u>நேர்காணலின்போது ஆவணங்களை சரிபார்த்தவர் கையொப்பம் மற்றும் பதவி பெயர்</u>**